# +2 கணக்குப்பதிவியல் – கருத்தியல்

( 5 மதிப்பெண் வினா விடை)

| | |
|---|---|
| பெயர்: | வகுப்பு:12 |
| பள்ளி: இந்து மேல்நிலைப்பள்ளி, மதுராந்தகம் | |

**1. இறுதிச் சரக்கிருப்பு என்றால் என்ன ? அது எவ்வாறு மதிப்பிடப்படுகிறது ?**

- கணக்காண்டின் இறுதியில் விற்காமல் உள்ள சரக்கின் மதிப்பு இறுதிச் சரக்கிருப்பு எனப்படும்.
- அடக்கவிலை அல்லது சந்தை விலை இதில் எது குறைவோ அந்த விலையில் மதிப்பிடப்படுகிறது.

**2. கொடுபட வேண்டிய செலவு என்றால் என்ன ?**

கணக்காண்டிற்கு உரிய செலவினங்கள் அந்த கணக்காண்டில் செலுத்தப்படாமலிருந்தால் அவை கொடுபட வேண்டிய செலவுகள் எனப்படும்.

(எ.கா) **கொடுபட வேண்டிய கூலி.**

**3. முன்கூட்டிச் செலுத்திய செலவு என்றால் என்ன ?**

செலவுகள் முன்கூட்டியே செலுத்தப்பட்டிருப்பின் அவை முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் அல்லது *பயன்தீரா செலவுகள்* எனப்படும்.

(எ.கா) ***முன்கூட்டி செலுத்திய வாடகை.***

**4. வாரா ஐயக்கடன் ஒதுக்கு பற்றி குறிப்பு வரைக.**

- ஒவ்வொரு நிறுவனத்திலும் ஏற்கனவே போக்கெழுதப்பட்ட வாராக் கடனுக்கும் அதிகமாக ஒரு குறிப்பிட்ட சதவீதம் வாராக்கடன் நேர்வது இயல்பு.
- இருப்புநிலைக் குறிப்பில் பற்பல கடனாளிகள் உண்மையான தொகையைக் காட்ட வேண்டுமெனில் வாரா ஐயக்கடன் ஒதுக்கு சரிக்கட்டப்பட வேண்டும்.
- கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில் பற்பல கடனாளிகள் மீது ஒரு குறிப்பிட்ட சதவீதம் வாராஐயக்கடன் ஒதுக்கிற்காக ஒதுக்கப்படும்.

**5. வாராக்கடன் என்றால் என்ன?**

1) கடனாளிகளிடமிருந்து திரும்பப் பெற இயலாத கடன் வாராக்கடன் எனப்படும்.
2) வாராக் கடன் வியாபாரத்திற்கு ஒரு இழப்பாகும்.

1) இலாபநட்ட கணக்கில் பற்றுபக்கம்

2) இருப்புநிலைகுறிப்பு சொத்துக்கள் பக்கம் –

பற்பலகடனாளிகளிலிருந்து கழித்துக்காட்டப்பட வேண்டும்.

### 6. சரிகட்டுப் பதிவு என்றால் என்ன?

- இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படுகையில் கணக்கேடுகளில் சேர்க்கப்பட வேண்டிய இனங்களை கணக்கேடுகளில் கொண்டு வருவதற்கு குறிப்பேட்டுப் பதிவுகள் செய்யப்படுகிறது.
- இத்தகைய குறிப்பேட்டுப் பதிவுகள் 'சரிகட்டுப் பதிவுகள்' என அழைக்கப்படுகின்றன.

<u>எடுத்துக்காட்டு.</u>

*இறுதி சரக்கிருப்பு, கொடுபட வேண்டிய செலவுகள்*

### 7. மாற்றுப்பதிவு என்றால் என்ன ?

எடுப்பு மீதான வட்டி, முதல் மீதான வட்டி, வாரக்கடன், தேய்மானம் போன்றவற்றை இலாபநட்ட கணக்குக்கு மாற்றம் செய்ய, செய்யப்படும் பதிவுகள் மாற்றுப்பதிவு எனப்படும்.

### 8. கடனாளிகள் மீதான தள்ளுபடி ஒதுக்கு பற்றி எழுதுக.

- கடனாளிகள் உரிய நேரத்தில் பணம் செலுத்துவதை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்கு ரொக்க தள்ளுபடி வழங்கப்படுகிறது.
- வாராஜயக்கடன் ஒதுக்கிற்குப்பின் மீதமுள்ள கடனாளிகள் திடமான கடனாளிகள் என அழைக்கப்படுகின்றனர். அவர்களில் சிலர் உரிய நேரத்தில் பணத்தை செலுத்தி ரொக்க தள்ளுபடி பெற விரும்புவர்.
- திடமான கடனாளிகள் மீது ஒரு குறிப்பிட்ட சதவீதம் தள்ளுபடி ஒதுக்கு உருவாக்கவேண்டும்.

### 9. கூடியுள்ள வருமானம் என்றால் எனன ?

**கூடியுள்ள வருமானம் :** ஈட்டிய வருமானம் உரிய கணக்காண்டில் பெறப்படாமலிருந்தால் கூடியுள்ள வருமானம் (பெறவேண்டிய வருமானம்)

1) இலாப–நட்ட கணக்கு வரவு பக்கம் குறிப்பிட்ட வருமானத்துடன் கூட்ட வேண்டும். 2)இருப்புநிலைக் குறிப்பு – சொத்துக்கள் பக்கம்

### 10. முதல் மீது வட்டி ஏன் இலாபநட்ட கணக்கில் பற்றுவைக்கப்பட வேண்டும் ?

- தொழில் திறத்தை அளவிட வேண்டுமாயின், முதல் மீதான வட்டியைக் கழித்து, நிகர இலாபம் கணக்கிட வேண்டும்.
- முதல் மீதான வட்டி தொழிலைச் சார்ந்த செலவாக அமைவதோடு, உரிமையாளருக்கு கிடைக்கும் ஆதாயமாக அமைகிறது. எனவே இதனை இலாப–நட்டக் கணக்கில் பற்றுவைக்கப்படவேண்டும்.

**11. ஒற்றைப்பதிவு முறைக்கு வரைவிலக்கணம் தருக.**

**<u>கோஹ்லர்</u> கூற்றுப்படி** "ஒற்றைப் பதிவு முறை என்பது ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகளின் பதிவுகளை மட்டுமே வைத்திருக்கும் கணக்குப்பதிவியல் முறையாகும். இது சூழ்நிலைக்கேற்றவாறு மாறக்கூடிய எப்பொழுதும் முழுமை பெறாத இரட்டைப் பதிவு முறையாகும்".

**12. ஒற்றைப் பதிவு முறையின் தன்மைகள் யாவை?**

1) தனிவணிக மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு மட்டும் ஏற்றது.
2) ஆள்சார் மற்றும் ரொக்கக் கணக்குகள் மட்டும் பராமரிக்கப்படுகிறது.
3) ஆதார ஆவணங்களைக் கொண்டு தகவல்கள் பெறுதல்.
4) உண்மையான நிதி நிலையை அறிய இயலாமை.

**13. ஒற்றைப் பதிவு முறையின் குறைபாடுகள்?**

1. முழுமையற்ற விஞ்ஞான அடிப்படையற்ற முறை
2. சொத்து மற்றும் பெயரளவு கணக்குகள் பதியப்படுவதில்லை
3. இருப்பாய்வு தயார் செய்ய இயலாது.
4. வியாபார கணக்கு இலாப நட்ட கணக்கு மற்றும் இருப்பு நிலைக்குறிப்பு தயாரிக்க இயலாது.
5. சரியான மொத்த இலாபம், நிகர இலாபம் அறிய இயலாது

**14. மாற்றுதல் முறை என்றால் என்ன?**

ஒற்றைப் பதிவு முறையில் உள்ள பதிவுகளைக் கொண்டு வியாபாரக் கணக்கு, இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கப்படுவது மாற்றுதல் முறை எனப்படும்.

**15. நிலை அறிக்கை என்றால் என்ன?**

- நிலை அறிக்கை என்பது இருப்பு நிலைக்குறிப்பைப் போன்றது.
- ஒற்றைப் பதிவு முறையில், முதல் (தொடக்க முதல் அல்லது இறுதி முதல்) கண்டறியப் பயன்படுவது நிலை அறிக்கை என்பதாகும்.
- சொத்துகள் மற்றும் பொறுப்புகளுக்கிடையேயான வேறுபாடு முதல் ஆகும்.

**16. தேய்மானத்திற்கு வரைவிலக்கணம் தருக?**

கார்டர் அவர்கள் கூற்றுப்படி ***"தேய்மானம் என்பது எக்காரணத்தினாலும் ஒரு சொத்தின் மதிப்பிலுண்டாகும் படிப்படியான நிலையான குறைவே ஆகும்".***

**17. காப்பீட்டு முறையில் தேய்மானம் கணக்கிடப்படுவதன் தேவை யாது ?**

- காப்பீட்டு முனைம முறையில் ஒவ்வொரு ஆண்டும் தேய்மானத்தொகை முனைமமாகச் செலுத்தப்படுகிறது.
- காப்பீட்டுக்காலம் முடிவடையும் பொழுது தொகை பெறப்படுகிறது.
- இந்த தொகை பழைய சொத்திற்கு பதிலாக புதிய சொத்துப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**18. வழக்கொழிவு என்றால் என்ன ?**

தேய்மானம் ஏற்படுவதற்கான புறக்காரணங்களில் இது ஒன்று. தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவை காரணமாக பழைய சொத்துகள் பயனற்றவையாக மாறுவது வழக்கொழிவு எனப்படும்.

**19. எறி மதிப்பு என்றால் என்ன? (அ)**

**இறுதி மதிப்பு என்றால் என்ன?**

ஒரு நிறுவனத்தில் ஒரு சொத்தின் பயனளிப்புக் காலம் முடிவடைந்தவுடன் அதை விற்கும் பொழுது கிடைக்கக் கூடிய மதிப்பை இது உணர்த்துகிறது. இது எறிமதிப்பு என அழைக்கப்படுகிறது.

**20. நடப்பு சொத்துக்கள் யாவை ?**

**நடப்பு சொத்துக்கள் :** ஒரு வருடத்திற்குள் ரொக்கமாக்கக் கூடிய சொத்துக்கள் நடப்பு சொத்துக்கள் ஆகும்.

**(எ.கா)** கைரொக்கம், வங்கி ரொக்கம், பற்பல கடனாளிகள், சரக்கிருப்பு

**21. விகித ஆய்வின் நன்மைகள் யாவை?**

1. இது நிதிநிலை அறிக்கை ஆய்வில் ஒரு பயனுள்ள கருவியாகும்,
2. இது கணக்கில் இனங்களை எளிமையாகவும், சுருக்கமாக அறிந்து கொள்ள உதவுகிறது,
3. இது நிதியியல் முன்கணிப்புக்கு உதவுகிறது,
4. இது நிறுவனத்துக்குள்ளே மற்றும் நிறுவனங்கட்கு இடையேயான ஒப்பு நோக்கு ஆய்வுக்கு உதவுகிறது.

**22. விகிதம் வரைவிலக்கணம் தருக.**

கென்னடி மற்றும் மேக்மிலன் கூற்றுப்படி *“விகிதம் என்பது ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் உறவினை எளிய கணிதவியல் முறையில் கூறுவது”.*

**23. புற–அகப் பொறுப்புகள் விகிதம் கணக்கிடப்படுவதன் தேவை யாது ?**

**புற–அகப் பொறுப்புகள் :** இது மொத்த நீண்ட காலக்கடன் மற்றும் பங்குதாரர்கள் நிதிக்கான உறவை உணர்த்துகின்றன. இது பங்குதாரரின் நிதியின் நீண்ட காலம் எந்த விதத்தில் அமைந்துள்ளது என்பதை குறிக்கின்றது.

$$\text{புற–அகப் பொறுப்புகள் விகிதம்} = \frac{\text{மொத்த நீண்ட காலக் கடன்கள்}}{\text{பங்குதாரர் நிதி.}}$$

**24. முதல் விற்பனை விகிதம் பற்றி குறிப்பு வரைக.**

விற்பனைக்கும், பயன்படுத்தப்பட்ட முதலுக்கும் இடையேயான உறவினை குறிக்கும் விகிதம் முதல்–விற்பனை விகிதம் ஆகும்.

முதல் விற்பனை விகிதம் = விற்பனை/பயன்படுத்தப்பட்ட முதல்

பயன்படுத்திய முதல் = நீண்டகால கடன் + பங்குதாரர் நிதி

**25. நடப்பு விகிதம் – சிறுகுறிப்பு வரைக.**

நடப்பு சொத்துக்கள் மற்றும் நடப்பு பொறுப்புகளுக்கு இடையேயான உறவாகும்.

நடப்புவிகிதம் = நடப்புசொத்துக்கள் / நடப்பு பொறுப்புக்கள்.

**26. ரொக்க திட்டப்பட்டியல் குறித்து ஒரு சிறுகுறிப்பு வரைக. (அ) ரொக்க திட்ட பட்டியல் என்றால் என்ன ?**

**ரொக்க திட்டப்பட்டியல் :**

1. இது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்கள் குறித்த ஒரு அறிக்கை ஆகும்.
2. இதனை நிதி திட்டப்பட்டியல் என்றும் அழைக்கலாம்.
3. ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் ஏற்படும் ரொக்கம் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் ரொக்க திட்டப்பட்டியல் காண்பிக்கின்றது.

**27. ரொக்கச் செலுத்துதலுக்கு ஐந்து எடுத்துக்காட்டு தருக.**

1. ரொக்க கொள்முதல்
2. சரக்களித்தோருக்கு செலுத்தும் தொகை
3. செலுத்தவேண்டிய வட்டி
4. சொத்துகள் வாங்குதல்
5. பங்குகள் கடனீட்டுப்பத்திரங்களை மீட்டல்
6. கடனை திரும்ப செலுத்துதல்.

**28. ரொக்கப் பெறுதலுக்கு ஐந்து எடுத்துக் காட்டுகள் தருக.**

1. ரொக்க விற்பனை
2. வாடிக்கையாளரிடம் பெற்ற ரொக்கம்
3. பெற்ற வட்டி,
4. சொத்துவிற்பனை
5. பங்குகள்/கடனீட்டு பத்திரங்கள் வெளியீடு மூலம் பெறப்படும் தொகை

**29. ரொக்க திட்டப்பட்டியலின் தன்மைகள் யாவை?**

1. இது எதிர்காலம் குறித்து முன்னரே தயாரிக்கக் கூடியது.
2. இது பணம் மற்றும் அல்லது அலகுகளின் எண்ணிக்கை அடிப்படையில் தெரிவிக்கக் கூடியது.
3. திட்ட இலக்கை அடைவதற்கான வழி

**30. ரொக்கதிட்டப் பட்டியலின் நன்மைகள் யாவை?**

1. போதுமான ரொக்க இருப்பை பேண
2. எதிர்கால ரொக்கத் தேவையை நிர்ணயிக்க
3. நிதித்தேவையை பூர்த்தி செய்ய.

**31. கூட்டாண்மையின் வரைவிலக்கணம் தருக**

**இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932** பிரிவு 4ன் படி *“எல்லோரும் சேர்ந்தோ எல்லோருக்காக ஒருவரோ நடத்தும் தொழிலின் லாபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு”* ஆகும்.

**32. நிலை முதல் முறை என்றால் என்ன?**

- ❖ ஒவ்வொரு கூட்டாளி பெயரிலும் இரண்டு கணக்குகள் அதாவது முதல் கணக்கு மற்றும் நடப்பு கணக்கு தொடங்கப்படும்.
- ❖ முதல் தொகை சில சூழ்நிலை தவிர பொதுவாக மாறாமல் அதே தொகையாக இருக்கும்.
- ❖ கூட்டாளி சம்பந்தப்பட்ட அனைத்து சரிகட்டுதல்களும் நடப்பு கணக்கில் பதியப்படும்.

**33. நற்பெயர் என்றால் என்ன?**

- ❖ நற்பெயர் என்பது நிறுவனம் வருங்காலத்தில் எதிர்பார்க்கும் கூடுதல் இலாபத்தைக் கணக்கிட்டு உருவாக்கப்படும் தற்போதைய மதிப்பாகும்.
- ❖ இது கடந்த காலங்களில் கூட்டாளிகளின் ஒட்டுமொத்த முயற்சிகளின் பலன் ஆகும்.
- ❖ ஒரு நிறுவனம் சாதாரண இலாபத்தைவிட கூடுதல் இலாபம் ஈட்டும் பொழுதுதான் நற்பெயர் உண்மையாக உருவாகிறது.

**34. நற்பெயரின் மதிப்பை கணக்கிடும் முறைகள் யாவை?**

1. சாராசரி இலாபமுறை
2. உயர் இலாபமுறை
3. மூலதனமாக்கமுறை

**35. காப்பு முதல் என்றால் என்ன?**

i. நிறுமம் கலைப்பின்போது மட்டும் அழைப்பு விடுக்க ஒதுக்கி வைத்துள்ள அழைக்கப்படாத முதலின் ஒரு பகுதி காப்பு முதல் எனப்படும்.

ii. சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்

iii. இருப்புநிலைக் குறிப்பில் தோன்றுவதில்லை.

**36. உயர் இலாபம் என்றால் என்ன?**

சாதாரண இலாபத்தைவிட கூடுதலாக பெறக்கூடிய சராசரி இலாபமே உயர் இலாபம் எனப்படும்.

உயர் இலாபம் = சராசரி இலாபம் - சாதாரண இலாபம்.

**37. அழைப்பு நிலுவைக்குறித்து நீவிர் அறிவது யாது?**

- சில நேரங்களில் பங்குதாரர்கள் அழைப்புத் தொகையை செலுத்த தவறிவிடுவர்.
- நிறுமம் விடுத்த அழைப்புகள் மீது பெறப்படாத தொகையின் மொத்தம் அழைப்பு நிலுவை என்றழைக்கப்படுகிறது.
- இருப்புநிலைக்குறிப்பில் செலுத்தப்பட்ட முதலைக் கணக்கிடுவதற்கு ஏற்றவகையில் இத்தொகை அழைக்கப்பட்ட முதலிருந்து கழித்துக் காட்டப்படும்.

**38. அழைப்பு முன்பணம் என்றால் என்ன?**

1. ஒரு விண்ணப்பதாரர் நிறுமம் அழைத்த தொகையைவிட அதிகமாக செலுத்தினால் மிகையாக செலுத்தப்பட்ட தொகை அழைப்பு முன்பணம் எனப்படும்.
2. அழைப்புத் தொகை பெறவேண்டிய நிலை ஏற்படும் போது அழைப்பு முன்பணத்தை அழைப்புத்தொகையில் சரி செய்யப்பட வேண்டும்.

**39. பங்கு ஒறுபிழப்பு என்றால் என்ன?**

- சில நேரங்களில் பங்குதாரர்கள் ஒதுக்கீடு அல்லது அழைப்புத் தொகையை செலுத்தத் தவறுவது உண்டு.
- இத்தகைய சூழ்நிலையில் தகுந்த அறிவிப்பு கொடுத்து நிறுவனத்தின் இயக்குநர்கள் முன்னர் வெளியிட்ட பங்குகளை ஒறுபிழப்பு செய்கின்றனர்.

**40. விகித அளவு அடிப்படை ஒதுக்கீடு என்றால் என்ன?**

- நிறுமத்தில் சில விண்ணப்பதாரர்களுக்கு விண்ப்பித்த பங்குகளை விட பங்குகள் குறைவாக ஒதுக்கீடு செய்யப்படும்.
- மிகையான விண்ணப்ப தொகை ஒதுக்கீட்டு தொகைக்கு சரிகட்டிக் கொள்ளப்படும்.